www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2024
# National Field Work Centre, Thondaimanaru.
## 1th Term Examination - 2024

**சித்திரக்கலை**
**Art**

**Three Hours**

**Gr. 12 (2024)**

சுட்டெண் : ..................................

அறிவுறுத்தல்கள் :
- ❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி - I
- ➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
- ➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

பகுதி - II
- ➢ இப் பகுதியிலிருந்து நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❖ பகுதிI, பகுதிII, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்குமட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

பகுதி–I

❖ **வினா இலக்கம் 1 தொடக்கம் 5 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் இடுக.**

1) யேசு பிரானை இலங்கையின் சுதேசிபோல் வரைந்த கலைஞன்
   (1) சோளியஸ் மெண்டிஸ்
   (2) M.சார்லிஸ்
   (3) முதலியார் அமரசேகர
   (4) ஸ்ரான்லிஅபயசிங்க
   (5) டேவிற் பெயின்டர் (…..)

2) செங்கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட உலகின் அதியுயர்ந்த கட்டடமாகக் கருதப்படுவது, இலங்கையிலுள்ள,
   (1) ரூவன்வெலிசாய ஆகும்
   (2) ஜேதவன தாதுகோபுரம் ஆகும்.
   (3) அபயகிரி தாதுகோபுரம் ஆகும்.
   (4) விஜயோத்பாய ஆகும்.
   (5) லோவாமகாபாய ஆகும். (……)

3) பொன்டிதகோமே குகைகளில் உள்ள ஓவியங்களுள்
   (1) முன்னால் பாயும் எருது இளைப்பாறும் பைசன் ஓவியங்கள் சிறப்புப் பெறுகின்றன
   (2) அம்பினால் தாக்கப்பட்டு விழுகின்ற பைசன் ஓவியங்கள் சிறப்புப் பெறுகின்றன.
   (3) மாமத் ஊர்வலம் சிறப்புப் பெறுகிறது.
   (4) வேகமாக முன்னால் பாயும் பைசன் எருது ஓவியம் சிறப்புப் பெறுகின்றது.
   (5) வேட்டையாடும் மனிதனைக் காட்டும் ஓவியம் சிறப்புப் பெறுகின்றது. (…… )

4) சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளிடையே சிவனின் குறியீடாகக் கருதப்படுவது.
   (1) புலியுடன் போரிடத் தயாராகும் மனிதனைக் காட்டும் முத்திரை.
   (2) கொம்புடைய கடவுளைக் காட்டும் முத்திரை.
   (3) நந்தி உரு இடம்பெற்றுள்ள முத்திரை.
   (4) எருதுடன் காணப்படும் மனிதவுருவ முத்திரை
   (5) மர வழிபாட்டைக் காட்டும் முத்திரை. (……)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

5) இலங்கையின் பாரம்பரிய குகை ஓவியர்கள் மனிதர்களினதும் விலங்குகளினதும் உருவங்களை வரையும் போது.
   1) சுறுசுறுப்பினை எடுத்துக்காட்டி இயற்கையாக வரைவதற்கு முயற்சி செய்துள்ளனர்.
   2) குறியீட்டு அடிப்படையில் எளிமையான அடிப்படை இயல்புகளை எடுத்துக்காட்டியுள்ளனர்.
   3) உயிரியல் அளவை விடப்பெரிதாக்கி வரைவதற்கு முயற்சி செய்துள்ளனர்.
   4) தொடர்பாடல் செயன்முறை ஒன்றிற்குப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்தியுள்ளனர்.
   5) பலாங்கொட மனிதனின் வாழ்வியலை எடுத்துக்காட்டுவதற்கு முயற்சி செய்துள்ளனர். (...........)

❖ **6 - 10 வரை கீழே தரப்படும் F, G, H, I, J எனப்படும் நிழற்படங்கள் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.**


**F**


**G**


**H**


**I**


**J**

6) F எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பயத்தை வெளிப்படுத்தும் இவ்வோவியத்தை நிர்மாணித்தவர் யார்?
   (1) சே. டீ. ஏ. பெரேரா (2) ஏ. சி. ஜீ. எஸ். அமரசேகர (3) ரியூடர் ராஜபக்ஷ
   (4) டேவிட் பெயின்டர் (5) ஹரி பீரிஸ் (……)

7) G எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இக்கட்டடக்கலை நிர்மாணிப்பு,
   1) எகிப்தின் நைல் நதிக்கரையில் காணக்கிடைக்கும் பிரமிட்டுக்களுள் ஒன்றாகும்.
   2) கீசா பீடபூமியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அபுசிம்பில் ஆலயமாகும்.
   3) எகிப்திய முக்கிய ஆலயங்களில் மிகப்பெரியதாகும்.
   4) எகிப்திய குடையப்பட்ட ஆலயங்களில் ஒன்றான அபுசிம்பில் ஆலயமாகும் .
   5) நைல் நதியின் கிழக்குபுற சமவெளியில் காணப்படும் லக்சோர் ஆலயமாகும். (……)

8) H எழுத்தால் காட்டப்பட்டும் நாகரிககாலச் சிலை
   1) சிந்துவெளி நாரிகத்திற்குரிய நடனப்பெண் சிலையைக் குறிக்கிறது.
   2) சிந்துவெளி நாரிகத்திற்குரிய தாய்த்தெய்வச் சிலையைக் குறிக்கிறது.
   3) சிந்துவெளி நாரிகத்திற்குரிய இளவரசி சிலையைக் குறிக்கிறது.
   4) சிந்துவெளி நாரிகத்திற்குரிய வீனஸ் சிலையைக் குறிக்கிறது.
   5) சிந்துவெளி நாரிகத்திற்குரிய உலோகபெண் சிலையைக் குறிக்கிறது. (...........)

9) I எழுத்தினால் காட்டப்பட்டுள்ள தாதுகோபம்.
   1) தம்புள்ள விகாரையில் காணப்படுகிறது.
   2) தெகல்றொுவ விகாரையில் காணப்படுகிறது.
   3) தந்திரிமலை விகாரையில் காணப்படுகிறது.
   4) ஹங்குரன்கெத்த விகாரையில் காணப்படுகிறது.
   5) கிரி விகாரையில் காணப்படுகிறது. (…....)

10) J எழுத்தால் காட்டப்பட்டுள்ளது
   1) பாரதத்தில் பௌத்த நினைவுக்கட்டடமாக முதன் முதலில் நிர்மாணிக்கப்பட்ட தூபியாகும்.
   2) அசோக மன்னன் பாரதத்தில் நிர்மாணித்த ஒரேயொரு தூபியாகும்.
   3) அசோக மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட சாஞ்சி தூபித்தொகுதியின் முக்கிய தூபியாகும்.
   4) வீதிஷா நகர அரசியால் அசோக மன்னனைக் கொண்டு கட்டுவிக்கப்பட்ட தூபியாகும்.
   5) புனித தாதுக்களைக் கொண்டதாக அசோக மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட தூபியாகும். (……)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ **வினாஇலக்கம் *11* தொடக்கம் *15* வரை கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையினை கீழ்தரப்பட்ட *1* தொடக்கம் *8* வரையுள்ள படங்களில் இருந்து தெரிவு செய்க**






| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|






| 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|

11) பொலநறுவைக்கால பிரசித்திபெற்ற தாதுகோபத்தைக் காட்டும் உரு.
(1) 2 (2) 6 (3) 4 (4) 7 (5) 8 (.........)


12) பிரசித்திபெற்ற வாகல்கடத்தை வெளிப்படுத்துகின்ற உரு
(1) 1 (2) 3 (3) 2 (4) 7 (5) 4 (.........)

13) வட்டதாகே அமைப்பின் எஞ்சிய பகுதியைக்காட்டும் உருக்கள்.
(1) 3,5 (2) 2,6 (3) 1,7 (4) 5,8 (5) 7,8 (.........)

14) வாயில் பகுதியில் காணப்படும் கலையம்சத்தைக் காட்டும் உருக்கள்.
(1) 5,7 (2) 1,4 (3) 1,7 (4) 2,4 (5) 4,7 (.........)

15) அசோக மன்னனால் சாஞ்சியில் நிர்மாணிக்கப்பட்ட தூபியைக் காட்டும் உரு
(1) 5 (2) 3 (3) 1 (4) 2 (5) 8 (.........)

➢ **36 - 40 வரை கீழே தரப்படும் நிழற்படத்தைத் தொடர்புபடுத்தி கேட்கப்படும் வினாக்களிற்குரிய பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.**



16) இவ்வோவியம் காணப்படும் இடம்
(1) களனி புதிய விகாரை (2) பெல்லன்வல விகாரை
(3) கொழும்பு தேசிய கலாபவனம் (4) கண்டி திருநிற்றி தேவாலம்
(5) கொழும்பு சுகந்திர வர்த்தக வலயம் (……)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

17) இந்நிர்மாணிப்பினை கருப்பொருளாக ஏற்றுக் கொள்ளக் கூடியது,
(1) வெற்றிகரமாக ஜெருசலத்தினுள் பிரவேசித்தல்
(2) நல்ல சமாரியன்
(3) பாதகாணிக்கை
(4) யேசுநாதர் சிலுவையில் அறையப்படல்
(5) கல்வாரிமலைக்கான புனித பயனம்
(……)

18) இவ் ஓவியம்,
(1) ஓவியர் சோளியஸ் மெண்டிசின் தூரிகையின் மகிமையை எடுத்துக்காட்டுவதாகும்.
(2) சோமபந்து வித்தியாபதியின் உருவமைப்பின் மகிமையைய எடுத்துக்காட்டுவதாகும்.
(3) அல்பட் தர்மசிரியின் பெறுமதி மிக்க விகாரைச் சுவர் ஓவியமாகும்.
(4) ஓவியர் எம். சார்லிசின் விகாரைச் சித்திரக் கலையின் நன்மதிப்பினை எடுத்துக் கூறும் ஓவியமாகும்.
(5) டேவிற் பெயின்டரின் கன்வஸ் ஓவியங்களுள் பெறுமதி மிக்க நிர்மாணிப்பாகும். (……)

19) இவ் ஓவியத்தின் வர்ணப் பயன்பாடு பற்றி ஆராயும் போது தெரிய வருவது,
(1) பிரகாசமான வர்ணப் பயன்பாட்டினைத் தவிர்த்து, இருண்ட வர்ணங்களின் மூலம் ஓவியத்தின் ஆழத்தினை வெளிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட ஒரு முயற்சி ஆகும்.
(2) பிரகாசமான வர்ணங்கள் ஊடாக ஐரோப்பிய அக்கடமி யதார்த்த சித்திரக்கலையில் இருந்து வேறுபட்ட வர்ணப்பயன்பாடாகும்.
(3) தொனிப்பொருளின் பொருத்தப்பாட்டுடனும் தொகுப்பு வர்ணங்களின் பயன்பாட்டினால் செய்யப்பட்ட உணர்வு பூர்வமான வெளிப்பாடு ஆகும்.
(4) வர்ணங்களின் குணப் பண்புகள் வெளிப்படுமாறு தெளிவாகத் தோன்றும் வர்ணங்களை ஒன்றுடன் ஒன்று பொருந்தச் செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி ஆகும்.
(5) வெப்ப வர்ணங்களின் வகைகள் சரியான ஒழுங்குகளுக்கமைய கையாளப்பட்ட ஓவியமாகும். (……)

20) இவ் ஓவியத்தின் வெளிப்பாட்டினதும் தொகுப்பினதும் சிறப்பம்சம்,
(1) மனித உருவங்களின் ஆடை அணிகலன்களை நோக்கும் போது நடன, நாட்டியக் கலையின் செல்வாக்குப் பெற்றுள்ளமை தெரிகிறது.
(2) இவ் ஓவியத்தின் மூலம் வெளிப்படுகின்ற அழகிய தன்மை கிராமியக் கலைகளினதும் உயர்தரமான சித்திரக் கலையினதும் ஒன்றிணைப்பாககத் தெரிகிறது.
(3) மனித உருவங்களில் விழுமியப் பண்புகளையும் அபிநயங்களையும் காணக்கூடிய தாகவுள்ளது.
(4) கிறிஸ்தவ சித்திரக் கலைக்குப் புதிய கருத்தொன்றினை வழங்கி, உணர்வு பூர்வமான, உயிரோட்டமான, மென்மையான உடல்நிலைகளைக் கொன்ட மனிதவுருவங்களை சித்தரித்தமை.
(5) சிகிரியா பரம்பரையினர் நாட்டிற்கு அறிமுகப்படுத்திய ரேகைகளின் நளினம் மீண்டும் இவரது ஓவியங்களில் சேர்க்கப்பட்ட சந்தர்ப்பமாகும். (……)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி – II

❖ **விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

**1)இலங்கையின் ஓவியக்கலையின் வளர்ச்சிக்கு பங்களிப்பாற்றிய பழைமையான நிறுவனங்களில் இலங்கைச் கலைச்சங்கமும் ஒன்றாகும்**

(i) இலங்கை கலைச்சங்க ஓவியர்களில் கிறிஸ்தவ சமயம் சார்ந்த ஓவியங்களை வரைந்த ஓவியரையும், அவரின் சுவரோவியம் காணப்படும் இடமொன்றினையும் குறிப்பிடுக.(2 புள்ளிகள்)

(ii) ஏ.சீ.ஜீ.எஸ் அமரசேகர முதலியாரின் வேலையின்மை / தச்சனின் வீடு என்ற ஓவியத்தை சுருக்கமாக மதிப்பிடுக. (5 புள்ளிகள்)

(iii) J.D.A பெரேராவின் ஓவியங்களின் ஊடாக அவரின் ஓவியப்பண்புகளை மதிப்பிடுக.(8 புள்ளிகள்)

**2) பண்டைய அரண்மனைகள் மற்றும் பௌத்த கட்டடங்களின் வாயில்கள் அழகிய செதுக்கல்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.**

(i) கைபிடிசுவரில் (கொரவக்கல்) காணப்படும் இரு வடிவங்களை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) இரத்தினப்பிரசாத காவற்சிலையின் அழகியல் பண்புகளை சுருக்கமாக மதிப்பிடுக.(5 புள்ளிகள்)

(iii) சந்திரவட்டக்கல்லானது காலத்திற்கு காலம் மாற்றம் பெற்று சென்ற விதத்தினை உதாரணத்துடன் விமர்சிக்குக. (8 புள்ளிகள்)

**3) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர் தாம் வசித்த குகைகளின் மேற்பரப்பிலும், பாறைகளிலும் ஓவியங்களை வரைந்துள்ளனர்.**

(i) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்கள் காணப்படும் இரு இடங்களை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட கால கலைஞர்கள் இவ்வோவியங்களை வரைந்தமைக்கான காரணங்களை சுருக்கமாக குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

(iii) ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்கள் ,இலங்கை வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களை விடத் தரமானவையாக கருதப்படுகிறது இதனை விமர்சிக்குக. (8 புள்ளிகள் )

**4) சிந்துவெளி மக்களின் கட்டட, சிற்பக்கலை தேர்ச்சியை அகழ்வராச்சி சான்றுகள் எடுத்துக் காட்டுகிறது.**

(i) சிந்துவெளி கண்டெடுக்கப்பட்ட முத்திரைகள் இரண்டைக் குறிப்பிடுக (2 புள்ளிகள்)

(ii) சிந்துவெளி மக்களின் வீட்டமைப்புப் பற்றி சுருக்கமாக விமர்சிக்குக . (5 புள்ளிகள்)

(iii) மொகஞ்சாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட நடனப் பெண் சிலையின் அழகியல் அம்சங்கள் மற்றும் ஊடக கையாளுகை தொடர்பாக விமர்சனம் ஒன்றை முன்வைக்குக. (8 புள்ளிகள்)

**5) இறப்பின் பின் வாழ்வு என்ற அடிப்படையில் எகிப்தியக் கலை வளர்ச்சி பெற்றது.**

(i) எகிப்திய சிலைகள் இரண்டின் பெயரினை எழுதுக. (2 புள்ளிகள்)

(ii) எகிப்திய கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாக அமையும் அபுசிம்பிள் ஆலயம் பற்றி சுருக்கமான விமர்சனத்தை முன்வைக்குக. (5 புள்ளிகள்)

(iii) பிரமிட்டின் (Pyramid) உட்புற சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டமைக்கான காரணத்தைக் குறிப்பிட்டு, அவற்றின பண்புகளையும் விமர்சிக்குக. (8 புள்ளிகள்)



agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 1th Term Examination - 2024

**சித்திரக்கலை**
**Art**

**Three Hours**

**Gr. 12 (2024)**

அறிவுறுத்தல்கள் :

- ✶ உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.
- ✶ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையயளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.

**இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டமும்**

❖ **பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன்கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந் தீட்டுக.**

- ✶ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
- ✶ பொருள்களினதும் செடியினதும் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.
- ✶ பொருள்தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன் மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந் தீட்டுக.
- ✶ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன் படுத்துக.
- ✶ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
- ✶ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 1th Term Examination - 2024

FWC

| சித்திரக்கலை Art | Three Hours / Gr. 12 (2024) | 22 | T | I |
|---|---|---|---|---|

**கவனிக்க :**

- ✶ நீங்கள் ஒரு சித்திரத்தை மாத்திரம் வரைய வேண்டும்.
- ✶ உங்கள் சுட்டெண்ணையும் உரிய வினா இலக்கத்தையும் விடைத்தாளின் பிற்பாக்கத்தில் உள்ள கோட்டில் தெளிவாக எழுதுக.
- ✶ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும் போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளுதல் உங்களுக்குப் பிரதிகூலமாக அமையலாம்.
- ✶ வர்ணந் தீட்டுவதற்கு நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக்கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம். (பெல்ற் பேனையைப் பயன்படுத்துதல் உகந்ததன்று)
- ✶ வரைவதற்கு வெள்ளைத் தாளும் தேவையானவர்களுக்குத் திசுத் தாளும் வழங்கப்படும்.

**“அ”, “ஆ”, “இ” பகுதிகளிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்க.**

### பகுதி அ சித்திர ஒழுங்கமைப்பு

1. பரபரப்பான நகர்புறச்சூழல்
2. திறந்த வெளியொன்றில் மதிய உணவருந்தும் யாத்திரிகர் குழுவினர்
3. வருடப்பிறப்பு தினத்தில் பெரியோர்களிடம் ஆசி பெறும் சிறுவர்கள்
4. வயல் வேலையில் ஈடுபட்டிருக்கும் பெண் விவசாயிகள்

### பகுதி ஆ அலங்கார ஆக்கம்

5. மரபுரீதியான அலங்கார அலகுகளை பயன்படுத்தி அறுகோண வடிவான பித்தளைத் தாம்பாளம் ஒன்றிற்கு பொருத்தமான அலங்காரமொன்றைத் திட்டமிட்டு லரைந்து வர்ணந்தீட்டுக.
6. சிறுவர்களின் தேவைக்கு உபயோகிக்க கூடிய துணிக்கு பொருத்தமான பரவுருவ அலங்காரமொன்றை நிர்மாணிக்குக.
7. பிராணிகளின் மூட்டற்ற உருவங்களைக் கொண்டு பத்திக் முறையில் வர்ணமிடத்தக்க 3ஓ2அடி அளவிலான சுவர் அலங்காரமொன்றை நிர்மாணிக்குக.

### பகுதி இ கிறபிக் சித்திரம்.

8. “சமய சக வாழ்வுடன் நல்ல சமூகத்தை உருவாக்குவோம்” என்ற தலைப்பில் வர்ண போஸ்ரர் ஒன்றை நிர்மாணிக்குக.
9. பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றின் போது விநியோகிக்கப்படுகின்ற கையேட்டின் முன் பக்கத்தை அலங்கரிப்பமற்கான கிறபிக் சித்திரமொன்றை நிர்மாணிக்குக.
10. யுவதிகளின் கேசத்திற்கு பயன்படுத்:தும் புதிய எண்ணெய் போத்தலுக்கான முகப்புறையொன்றை (Lebel)ஒன்றை நிர்மாணிக்குக.



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2023

FWC

சித்திரக்கலை
Art

Gr -12 (2024)

Three Hours

### மேற்பார்வையாளருக்குரியது

**நிலைப்பொருட்கூட்ட வரைதல்**
**(ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்களின் அமைப்பு)**



## வைக்கப்பட வேண்டிய பொருட்கள்

(1) பெட்டி
(2) சீத்தை துணி
(3) பிளாஸ்டிக் யக்
(4) செவ்விளநீர்
(5) குறோட்டன் கிளை



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk